சுருக்கம்

கைத்தறி தொழில் - நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கான ஊதிய சீரமைப்புக் குழு – நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் மற்றும் இதர பரிந்துரைகளின் மீது ஆணை வெளியிடப்படுகிறது

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (டி1) துறை

அரசாணை (நிலை) எண்.162 நாள் 13.11.2008

(ஐப்பசி 28, திருவள்ளுவர் ஆண்டு 2039)

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.34, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை நாள் 16.03.1998
2. அரசாணை (நிலை) எண்.159, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை நாள் 25.10.2007.
3. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கடிதம் ந.க. எண். 39556/2007/ ஜி1 நாள் 06.06.2008.

---

ஆணை

மேலே படிக்கப்பட்ட ஒன்றாம் அரசாணையில், நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் ஊதியம் திருத்தியமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் 01.07.1997 முதல் அமலாக்கப்பட்டது. இந்த திருத்திய ஊதிய விகிதம் ஐந்து ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, அனைத்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் சங்கப் பணியாளர்களுக்குரிய திருத்திய ஊதிய விகிதத்தை அமல்படுத்தின. இதன் காலம் 30.06.2002-உடன் முடிவடைந்து விட்டது. பல்வேறு பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களது ஊதியத்தினை உயர்த்தி வழங்க கோரிக்கைகள் பெறப்பட்டன. 2007-2008-ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி) அவர்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழு அமைக்கப்படும் என அறிவித்தார்.

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட இரண்டாம் அரசாணையில், நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை சீரமைப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை பரிசீலித்து அறிக்கை அளிக்க ஒரு சீரமைப்புக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவானது அரசிடமிருந்து எந்த நிதி உதவியையும் எதிர்பாராமல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாளர்களின் ஊதிய விகிதம் ஆகியவற்றை அச்சங்கங்களின் நிதி நிலைமையின் அடிப்படையில் பரிந்துரை செய்யப்படவேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

3. இச்சீரமைப்புக் குழுவானது நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நிதிநிலை மற்றும் பணியாளர்களின் நிலை தொடர்பான விபரங்களைப் பெற்று, அதனை பகுப்பாய்வு செய்து, மாவட்ட வாரியாக பயணம் மேற்கொண்டு, பணியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்து, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நிதிநிலைமைக்கேற்பவும், பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டும் தனது அறிக்கையை 28.05.2008 அன்று சமர்ப்பித்துள்ளது. குழு தனது அறிக்கையில் கீழ்க்கண்ட இனங்கள் தொடர்பாக பரிந்துரைத்துள்ளது:-

| | |
|---|---|
| 1. | சங்கங்களின் வகைப்பாடு |
| 2. | பணியாளர்களின் பதவி நிலைகள் |
| 3. | சம்பள விகிதம் மாற்றியமைத்தல் |
| 4. | ஊதிய நிர்ணயம் |
| 5. | அகவிலைப்படி |
| 6. | வீட்டு வாடகைப்படி |
| 7. | பயணப்படி |
| 8. | விடுதிக் கட்டணம் |
| 9. | கண்காட்சிப்படி |
| 10. | கிளைப்படி |
| 11. | மருத்துவப்படி |
| 12. | தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை |
| 13. | தற்காலிகப் பணியாளர்கள் பணி நிரந்தரம் |
| 14. | தற்காலிகப் பணியாளர்களுக்கு தொகுப்பூதியம் |
| 15. | பணியாளர்கள் எண்ணிக்கை |
| 16. | ஈட்டிய விடுப்பு மற்றும் இதர விடுப்புகள் |
| 17. | ஓய்வூதியம் |
| 18. | மருத்துவ காப்பீட்டுத் திட்டம் |
| 19. | முன்பணங்கள் |
| 20. | ஊதிய ஒப்பந்தங்கள் |
| 21. | புதிய ஊதிய விகிதங்களை செயல்படுத்துதல் |
| 22. | முரண்பாடுகளை களைதல் |
| 23. | திருத்திய ஊதியங்களுக்கான செலவினங்கள் |
| 24. | நட்டத்தில் இயங்கும் சங்கங்களுக்கு புத்துயிரூட்டல் |
| 25. | விற்பனை ஊக்கத் தொகை |
| 26. | நிர்வாக செலவினங்களுக்கான உச்சவரம்பு |

4. மேலே படிக்கப்பட்ட மூன்றாம் கடிதத்தில், சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்று, நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு திருத்தப்பட்ட ஊதிய விகிதங்கள் மற்றும் படிகளை 01.01.2008 முதல் அமல்படுத்த ஆணை வழங்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகளை அரசு கவனத்துடன் பரிசீலித்து, நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கான ஊதிய சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகளை

முழுமையாக ஏற்று, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(அ) 01.01.2008 முதல் நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கான திருத்திய ஊதிய விகிதங்களை குறைந்த மற்றும் அதிகப்பட்சமாக நிர்ணயம் செய்து, அதாவது தற்பொழுதுள்ள ஊதியத்தை விட 27 சதவிகிதத்திற்கு மேற்படாமல் ஊதிய நிர்ணயம் செய்யப்பட வேண்டும். புதிய ஊதிய நிர்ணயத்தின்படி சங்கங்களின் இலாப நட்டம் பாராமல் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரே மாதிரியான ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும். புதிய ஊதிய விகிதங்களை நடைமுறைப்படுத்துவது கட்டாயமாகாது என்றாலும், ஒவ்வொரு சங்கமும் அதன் நிதி நிலைமைக்கேற்றவாறு முடிவு செய்யவேண்டும். அவ்வாறு புதிய ஊதிய விகிதங்களை நடைமுறைப்படுத்தும்போது, சங்கங்களுக்கு ஏற்படும் கூடுதல் நிதிச்சுமை, சங்கங்களின் இலாபம் மற்றும் படிப்படியாக ஏற்படும் நட்டம் ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டும். சங்கங்கள் பாதிப்படையாவண்ணம் புதிய ஊதிய விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, நெசவாளர்களின் நலனும் உறுதி செய்யப்பட வேண்டும். மேலும் மிகைப் பணியிடங்களில் பணிபுரியும் நபர்கள் ஓய்வு பெறும்போதோ/ அப்பணியிடங்களை தாமாக விட்டுச் செல்லும்போதோ அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படக்கூடாது.

(ஆ) ஊதியத் திருத்தத்தைத் தவிர, சீரமைப்புக் குழுவின் மற்ற பரிந்துரைகளின் மீது கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

விஷ்வநாத் ஷெகாவ்கர்,
அரசு செயலாளர்.

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 108
மேலாண்மை இயக்குநர், கோ-ஆப்டெக்ஸ், சென்னை – 8
மாநிலக் கணக்காயர் ( A&E) சென்னை – 18
மாநிலக் கணக்காயர் (CA ) சென்னை – 18
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை –1
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 9
சிறப்பு அலுவலர், முதலமைச்சர் அவர்களின் செயலகம், சென்னை – 9
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
நிதித் துறை, சென்னை – 9
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை – 9
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (ஏ1) துறை, சென்னை – 9
இகோ / உதிரி நகல்

//ஆணைப்படி // அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்